பக்கங்கள்:-19

காலை முரசு

## மீண்டும் களமிறங்குவேன்

### மேர்வின் சூளுரை



"அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் களமிறங்வேன். நிச்சயம் வெற்றி பெற்று நாடாளுமன்றம் செல்வேன்." 07▶

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 15 | திங்கட்கிழமை | 29.01.2024 | அதிர்வு 181




# தமிழரசின் பிளவால் ஒற்றுமைக்குப் பாதிப்பு

## புளொட் தலைவர் சித்தர் கவலை

– எஸ்.நிதர்ஷன் –

இலங்கைத் தமிழரசுக் கட்சி இரண்டாக - மூன்றாக உடைந்திருப்பது ஒற்றுமை முயற்சியில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

யாழ். கந்தரோடையிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே இவ்வாறு கூறினார். 07▶

## மலையகம் பூராகவும் போராட்டம் வெடிக்கும்

### டயகமவில் திகாம்பரம் முழக்கம்

"மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வை வழங்குவதற்குக் கம்பனிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.இதற்கான அழுத்தங்களை அரசும் பிரயோகிக்க வேண்டும். அவ்வாறு இல்லையேல் மலையகமெங்கும் 06▶





கட்சியின் தலைமைத்துவத்துக்கு சகல தரப்புகளையும் அரவணைத்து, ஐக்கியப்படுத்தி, ஒன்றிணைத்துக் கட்சியை முற்கொண்டு செல்லும் பண்பியல்பு முக்கியமானது தான்.

அதனை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தேர்வான சிறீதரனிடம் கண்டு, விதந்துரைத்திருந்தேன். எனினும் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்ட வேண்டும்.

எல்லோரையும் அரவணைக்கும் 06▶

# புதிய கூட்டணியில் இணைவதற்கு 28 கட்சிகள், 60 எம்.பிக்கள் பேச்சு

## நிமல் லான்ஸா கூறுகிறார்

**“புதிய கூட்டணியில் இணைவதற்காக 28 இற்கும் மேற்பட்ட கட்சிகளும், 60 இற்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் எம்முடன் பேச்சு நடத்தி வருகின்றனர். ஜனநாயக ரீதியான அதிகாரத்தை, ஒரு தலைவரிடம் அன்றி ஒரு தலைமைத்துவ சபைக்கு வழங்கும் வேலைத்திட்டத்தை எமது கூட்டணி முன்னெடுக்கும்.”**

**- இவ்வாறு புதிய கூட்டணியின் ஸ்தாபகரான நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்ஸா தெரிவித்தார்.**



புதிய கூட்டணியை கட்டியெழுப்பும் நோக்கில் ஜா–எல நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே நிமல் லான்ஸா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“பெருமளவிலான எம்.பி.க்களையும், கட்சிகளையும் இணைத்து எதிர்காலத்தில் மிகப் பெரிய கூட்டணி உருவாக்கப்படும். வரலாற்றில் முதன்முறையாக கட்சி சின்னமோ, கட்சியோ இல்லாமல் ஒரு நிகழ்ச்சியை வெற்றி பெற செய்வதற்காக ஏராளமானோர் திரண்டுள்ளனர். தலைவரோ, தலைமைக் குழுவோ இல்லாமல் எமது அழைப்பை ஏற்று வந்துள்ள மக்களுக்கு எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

பொய்யான வாக்குறுதிகளை வழங்குவதற்காக இந்த கூட்டணி ஒன்று கூடவில்லை. பொருளாதாரத் திட்டத்தை வலுப்படுத்தி நாட்டை மீட்டெடுக்கவே கூடியுள்ளது. இதுவரை வந்த அரசியல் பயணம் கடந்த இரண்டு வருடங்களில் பின்னோக்கி சென்றுள்ளது. கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த சிறிது காலத்திலேயே 30 வருட அரசியல் பின்னோக்கிச் சென்றுள்ளது. கற்ற சிலர் அவரைச் சூழ்ந்து கொண்டு, முதல் பணியாக வரியைக் குறைக்க ஆலோசனை வழங்கினர். இந்த ஆலோசனையை வழங்கியவர் நாலக கொடஹேவா. இப்போது அவர் சஜித்துக்கு அறிவுரை வழங்குகிறார்.

மக்களுக்கு உண்மையை எடுத்துரைப்பதற்காகவே இந்தப் பணியை ஆரம்பித்துள்ளோம். மக்களுக்கு யதார்த்தத்தை சொல்ல, வருமானம் மற்றும் செலவு என்றால் என்ன, வருமானத்தைப் பெருக்கி, செலவுகளைக் குறைக்கும் முறையைக் கூற வேண்டும். இதைப் பற்றி அரசியல்வாதிகள் மேடைகளில் பேசுவதில்லை. மக்களுக்கு உண்மையையும், யதார்த்தத்தையும் புரிய வைக்க இப்புதிய கூட்டணி முடிவு செய்துள்ளது.

இந்தக் கூட்டணிக்கு ஒரு தலைவர், கட்சி, சின்னம் இல்லாவிட்டாலும் நாடாளுமன்றத்தில் அதிக எண்ணிக்கையிலான எம்.பி.க்களும், அதிக எண்ணிக்கையிலான கட்சிகளும் சேர்க்கப்பட்டு மிகப்பெரிய கூட்டணி உருவாக்கப்படும்.

இலங்கை முழுவதிலும் உள்ள பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொழிற்சங்கங்கள், ஏனைய கட்சிகளின் தொழிற்சங்கங்கள் எம்முடன் இணைந்து கொள்ளவுள்ளனர். இது ஒரு ஒத்திகை மாத்திரமே. அனைத்துக் கட்சிகளுடனும், அனைத்து எம்.பி.க்களுடனும் பேசி, துணைத் திட்டத்தை தயாரித்துள்ளோம். எனவே, அச்சமின்றி ஒன்றுபடுங்கள். பொய்யர்களாலும், தற்பெருமையாளரர்களாலும் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

இந்த புதிய கூட்டணிக்காக 28 இற்கும் மேற்பட்ட கட்சிகளும், 60 இற்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் எம்முடன் பேச்சு நடத்தி வருகின்றனர். இலங்கையில் மிகப் பெரிய கூட்டணியை உருவாக்கி, அதிக எண்ணிக்கையிலான எம்.பி.க்கள் கொண்ட ஒவ்வொரு ஆசனத்திலும் மக்களை அணி திரளச் செய்து, ஜனநாயக ரீதியான ஓர் அதிகாரத்தை, ஒரு தலைவரிடம் அன்றி ஒரு தலைமைத்துவ சபைக்கு வழங்க முடியும்.

கோட்டாபாய ராஜபக்ஷவை அழைத்து வருமாறு சமூக வலைத்தளங்களில் பெரும் அலை எழுப்பப்படுகிறது. நாம் அப்பணிக்குச் செல்லவில்லை. செயற்கையாக உருவாக்கப்பட்ட சமூக ஊடக அலைகளுக்குள் சிக்கிக் கொள்ளாமல் இருங்கள். வாய் வீச்சாளர்களுக்கு வாக்களிக்க வேண்டாம்.”– என்றார்.




# இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாக அனுஷ்டிக்கத் தீர்மானம்

## மட்டக்களப்பில் அமைதிப் பேரணிக்கும் ஏற்பாடு

மட்டக்களப்பில் இலங்கை சுதந்திர தினமான பெப்ரவரி 4ஆம் திகதியைக் கரிநாளாக அனுஷ்டித்து, தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் விதமான அமைதிப் பேரணிக்கு வலுச்சேர்ப்பதற்காக அனைத்து வர்த்தக நிலையங்களையும் பூட்டி, அனைவரும் ஆதரவு வழங்கி, பேரணியில் கலந்துகொள்ளுமாறும் கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க தலைவிகள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க தலைவிகள் கலந்துகொண்டு இவ்வாறு கோரியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் கூறுகையில் –

வடக்கு, கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் சுதந்திர தினத்தினை வடக்கு, கிழக்கில் கரிநாளாக அனுஷ்டிக்க ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த கரிநாளை முன்னிட்டு கிழக்கு மாகாணத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கங்கள் ஒன்றிணைந்து எதிர்வரும் 4ஆம் திகதி மட்டக்களப்பு கல்லடி பாலத்தில் இருந்து காந்தி பூங்கா வரை அமைதிப் பேரணியை முன்னெடுக்கவுள்ளன.

75 வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்களுக்கு சுதந்திரம் பகிரப்படவில்லை. மாறாக, ஆள்கடத்தல், படுகொலைகள், நில அபகரிப்பு, வரலாற்று திரிவுபடுத்தல், ஊடக அடக்குமுறை போன்ற பல்வேறு ஒடுக்குமுறைகள் தொடர்ச்சியாக தமிழர்களிடம் திணிக்கப்பட்டு வருகின்றன.

எனவே, அந்தக் கரிநாளில் வர்த்தக நிலையங்களை பூட்டி, எமது அமைதிப் பேரணிக்கு ஆதரவு வழங்குமாறும், மீன்பிடிச் சங்கங்களும் அனைத்து தொழிற்சங்கங்களும் மூவின மக்களும் கலந்துகொண்டு எமக்கு ஆதரவு வழங்குமாறும் அன்புடன் அழைப்பு விடுக்கின்றோம். – என்றனர்.









# செல்லக்கதிர்காமத்தில் விபத்து ஒருவர் பலி; நான்கு பேர் காயம்

கதிர்காமம் – செல்லக் கதிர்காமம் வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வான் ஒன்றும் லொறியொன்றும் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் வானில் பயணித்த மேலும் 4 பேர் காயமடைந்துள்ளனர்.

அத்துடன், உயிரிழந்த நபர் வானில் பயணித்தவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# அமைச்சர் சனத் நிஷாந்தாவின் பூதவுடல் நேற்று நல்லடக்கம்

மறைந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தாவின் பூதவுடல் நேற்று புத்தளம் ரஜகடலுவ மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

கட்டுநாயக்க அதிவேக நெடுஞ் சாலையில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த சனத் நிஷாந்தாவின் இறுதிக்கிரியைகள் நேற்றுப் பிற்பகல் 1 மணி முதல் இடம்பெற்றன.

ஆராய்ச்சிக்கட்டுவவில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த நிலையில், இறுதிக் கிரியைகள் இடம்பெற்று பெருந்திரளான மக்களின் கண்ணீர் அஞ்சலியுடன் பூதவுடல் அடக்கம் செய்யப்பட்டது.

அவரது உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக அதிக எண்ணிக் கையிலான மக்கள் கூடியிருந்தனர்.



இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக பிரதேச மக்கள், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்கள் நிமால் சிறிபால டி சில்வா, கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட பல அரசியல்வாதிகள் வருகை தந்தனர்.

48 வயதான சனத் நிஷாந்த நான்கு பிள்ளைகளின் தந்தை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கராத்தே, மோட்டார் வாகன விளையாட்டு தொடர்பான

# இரண்டு இடைக்காலக் குழுக்களும் உடனடியாக கலைக்கப்பட்டுள்ளன

விளையாட்டுத்துறை அமைச்சினால் நியமிக்கப்பட்ட இரண்டு இடைக்கால குழுக்கள் உடனடியாக அமுலாகும் வகையில் கலைக்கப்பட்டுள்ளன என அதிவிசேட வர்த்தமானி அறிவித்த லொன்றின் ஊடாக அறிவிக்கப்பட் டுள்ளது.

இலங்கை கராத்தே சம்மேளனம் மற்றும் இலங்கை மோட்டார் வாகன விளையாட்டு என்பவற்றுக்கு நியமிக் கப்பட்ட இரண்டு இடைக்கால குழுக்களே கலைக்கப்பட்டுள்ளன.

சட்டபூர்வமான பதவிகாலம் நிறை வடைந்த பின்னர் மீண்டும் தேர்தலை நடத்தும் வரை மேற்படி சங்கங்களின் முந்தைய நிர்வாக சபைக்கு அதன் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் வெளியிட்டுள்ள அதிவிசேட வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுத்துறை மற்றும் செல்லுபடியாகும் விளையாட்டு உத்தர வுகளுக்கு அமைய இந்த அதிகாரங்கள் மீள வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.



# கொக்கட்டிச்சோலை படுகொலைகளின் நினைவேந்தல் கிழக்குப் பல்கலையில்!

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் ஸ்ரீலங்கா இராணுவத்தினால் 28.01.1987 ஆம் ஆண்டு சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட 83 அப்பாவி தமிழ் உறவுகளின் நினைவேந்தல் கிழக்குப்பல்கலைக்கழக தமிழ் மாணவர்களால் நேற்று பொங்கு தமிழ்த் தூபியின் முன்பாக ஈகைச்சுடரேற்றி முன்னெடுக்கப்பட்டது.

கிழக்குப் பல்கலைகழகத்தின் அனைத்துப் பீட தமிழ் மாணவர்களினால் இந்த நினைவேந்தல் முன்னெடுக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.









## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெயரில் அல்லது நோக்கத்தில் இழுத்த பக்கமெல்லாம் இழுபடுவதும் சிறந்த தலைமைத்துவமாகி விடாது. எடுக்க வேண்டிய முடிவுகளை – தீர்மானங்களை – எடுக்க வேண்டிய நேரத்தில் 'கட் அண்ட் ரைட்' ஆக எடுத்து முன் நகர்வது முக்கியம். எல்லா விடயங்களிலும் எல்லோரையும் கேட்டு, எல்லோரையும் சமாளித்து, எல்லோரினதும் இணக்கத்துடன் முன்னெடுப்பது என்பதும் சாத்தியப்படாதது தான். அத்தகைய சாத்தியப்பாடற்ற விடயத்துக்காக காலத்தை இழுபட விடுவதும் நழுவல் வலுவல் தலைமை ஆகிவிடும்.

தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாகிகள் தெரிவு தொடர்பான விடயத்தை அந்தரத்தில் தொங்க விட்டிருக்கும் சிறீதரனின் முடிவு – அதுவும் மாவை சேனாதிராஜாவுடன் சேர்ந்து, அவர் எடுத்திருக்கும் தீர்மானம் – கட்சித் தலைவருக்கான தேர்தலில் தெரிவாகி ஒரு வாரத்துக்குள் இவரும் ஒரு மாவை சேனாதிராஜாதான் என்ற படிமத்தைத் தந்து நிற்கின்றது.

அதுதான் நிலைமை என்றால் 10 ஆண்டுகள் கடந்தும் அந்தக் கட்சிக்கு இன்னும் மீட்சி இல்லை என்பது தான் அர்த்தம்.

எது, எப்படியோ கட்சியின் தேசிய மாநாட்டை நடத்தாமல் இழுத்தடிப்பதன் மூலம் கட்சித் தலைமையில் தாமே தொடர்வதற்கான சின்னத்தன அரசியலை மாவை சேனாதிராஜா தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றார் என்று இப்பத்தியில் பல தடவைகள் சுட்டிக்காட்டி வந்தேன். இவ்வளவுக்குப் பின்னரும் வெற்றிகரமாக மாநாட்டின் வைபவ ரீதியான அமர்வை தள்ளிப் போட வைத்துத் தமது காரியத்தை – இலக்கை – சாதித்துக் கொண்டிருக்கின்றார் மாவை.

இதற்கிடையில் கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கிழக்கிலங்கையில் – மட்டக்களப்பில் – ஒரு விடயத்தைச் சிலர் கட்டவிழ்க்கின்றனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த முன்னாள் எம்.பியான சிறீநேசனுக்குக் கிடைக்கவிருந்த கட்சியின் பொதுச் செயலாளர் பதவி கட்சியின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் இராசமாணிக்கம் சாணக்கியன் எம்.பி., முன்னாள் மேயர் சரவணபவன் மற்றும் சேயோன் போன்றவர்களால் முறியடிக்கப்பட்டது என்ற பிரசாரத்தை சிறீநேசன் – அரியநேத்திரன் – யோகேஸ்வரன் – போன்றோரின் தரப்பு, பரப்பி வருகின்றது என்றும், அதன் மூலம் சாணக்கியனுக்கு எதிரான உள்ளூர் பிரதேசவாதத்தைத் தூண்டி விடுவதற்கு அற்பத்தனமான முயற்சிகள் நடைபெறுகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது. கிழக்கில் சிலரின் மோசமான அரசியல் செயற்பாடு இது.

நேற்று முன்தினம் காலையில் திருகோணமலையில் நடந்த தமிழரசின் மத்திய குழுக் கூட்டத்தில் திருகோணமலை மாவட்ட கிளைத் தலைவர் குகதாசனின் பெயரை சுமந்திரன் பிரேரித்த போது, பிரதான தலைமை மேசையில் அமர்ந்திருந்த சிறீதரன் எழுந்து சென்று உறுப்பினர்கள் தரப்பில் முதல் வரிசையில் இருந்த சிறீநேசன், யோகேஸ்வரன், அரியநேத்திரன் போன்றோருடன்தான் ஆலோசனை கலந்தார்.

அதன் பின்னர்தான் சிறீதரன் வந்து அந்த முடிவுக்கு மட்டக்களப்புத் தரப்பினர் இசைக்கின்றனர் என அறிவித்தார். அவர் சாணக்கியனோடு அல்லது சரவணபவனுடன் அல்லது சேயோனோடு அது குறித்து பேசி முடிவெடுக்கவில்லை. அந்த முடிவு சிறீநேசன், யோகேஸ்வரன், அரியநேத்திரன் அணியின் இசைவுடன்தான் முன்னெடுக்கப்பட்டது.

பின்னர் அந்தத் தீர்மானம் மத்திய குழுவில் ஏகமனதாக எடுக்கப்பட்ட போதும், அந்த மூவரும் சேர்ந்து, இணங்கி, உடன்பட்டு அதனை அங்கீகரித்திருந்தனர்.

பொதுக்குழுவில் அவ்விடயம் ஆராயப்பட்டபோது அதற்கு சிலர் எதிர்ப்பு தெரிவிக்க, அந்தக் கூட்டத்துடன் சேர்ந்து களேபரம் பண்ணினர் இந்த மூவரும்.

பொதுக்குழு விவாதத்தின் போது சிறீநேசனின் போக்கு விமர்சிக்கப்பட்டது.

மேற்படி குகதாசன் பொதுச் செயலாளர் என்பது உட்பட்ட நிர்வாகிகள் பட்டியலை மத்திய குழுவில் ஏற்று, அங்கீகரித்த விட்டு, இப்போது இங்கு பொதுக்குழுவுக்கு வந்து அதற்கு முரணாக – மாறாக – செயற்படுகின்றீர்களே என்று சிறீநேசனிடம் சுட்டிக் காட்டப்பட்ட போது அவர் பகிரங்கமாக அதனை ஒப்புக் கொண்டார்.

"ஆம். நான் அங்கு மத்திய குழுவில் அதனை ஏற்று ஒப்புக்கொண்டேன். அதற்கு இணங்கினேன், இப்போது என் ஆதரவாளர்கள் அதனை எதிர்க்கின்றார்கள். அதனால் அதனை நானும் எதிர்க்கின்றேன்" – என்று வியாக்கியானம் வேறு கூறினார் சிறீநேசன்.

அவரைத்தான் கட்சியின் பொதுச் செயலாளராக்கி, கட்சியைத் தம்மோடு சேர்ந்து வழிநடத்த அழைக்கின்றார் சிறீதரன் போலும்.

அப்படிக் குகதாசனை செயலாளராக்கும் முடிவுக்கு மத்திய குழுவில் அரியநேத்திரன், சிறீநேசன், யோகேஸ்வரன் அணி ஒன்று சேர்ந்து இணங்கி, அங்கீகாரம் அளித்து, செயற்பட்டு விட்டு, அந்தப் பதவி மட்டக்களப்புக்கு கிடைக்காமல் போனமைக்கு சாணக்கியன் மீது இப்போது பழி போடுவது அரசியல் அபாண்டம்.அபத்தம். அற்பத்தனம்.

இன்னொரு விடயமும் உண்டு.

பொதுச் செயலாளர் பதவி கிழக்குக்கு என்ற போது கட்சியின் மட்டக்களப்பு மாவட்டக் கிளைத் தலைவர் சாணக்கியனின் பெயரும் பரிசீலிக்கப்பட்டது. எங்கே அவருக்குப் பொதுச் செயலாளர் பதவியை கொடுத்து விடுவார்களோ என்று பயந்த சிறீநேசன், சாணக்கியனுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை அங்கு விவரிக்கத் தொடங்கினார் மத்தியகுழுவில்.

"சாணக்கியர் ஒரு சண்டியர் போல செயல்படுகின்றார். அவருக்கு அரசியல் முதிர்ச்சி இல்லை" – என்றெல்லாம் சிறீநேசன் விமர்சித்தார்.

மத்திய குழுவில் தாமும் சேர்ந்து, இணங்கி, எடுத்த முடிவை ஓரிரு மணித்தியாலங்களுக்குள் பொதுக்குழுவில் கடுமையாக எதிர்க்கும் அளவுக்கு அரசியல் முட்டாள்தன முதிர்ச்சி கொண்டவர் அல்லர் சாணக்கியன்.

அடுத்த விடயம் – திருகோணமலை போன்ற பேரினவாதக் கொடூரம் அதிகம் உள்ள தமிழர் தாயகப் பிரதேசங்களுக்கு 'ஃபயர் பிராண்ட்' தலைவர்கள்தான் தேவை என்று என் பத்தியில் நான் தொடர்ந்து பிரஸ்தாபித்து வலியுறுத்தி வருகிறேன்.

அதுவும் பிள்ளையான், கருணா, வியாழேந்திரன் என்ற அடாவடி அரசியல்வாதிகளுக்கு மட்டக்களப்பில் ஈடு கொடுக்க யோகேஸ்வரன் ஐயா போன்ற திருநீற்று குறிச் சாமியார் போக்குச் சரிவராது என்பது என் கணக்கு.

துணிச்சலும், சீற்றமும், துள்ளி எழும் வேகப் போக்கும் கொண்ட சாணக்கியன் போன்றோரே அத்தகைய இடங்களுக்கு முக்கியம். அவரது நடவடிக்கை சிறீநேசனின் பார்வையில் சண்டித்தனம் என்றாலும், இன்று தமிழினத்திற்கு அந்தச் சண்டித்தனமே தேவைப்படுகின்றது. வெறுமனே தலைவர் பிரபாகரனின் வாரிசுகள் தாங்கள் என்று வேடமிட்டுக்கொண்டு தொடை நடுங்கி அரசியல் செய்பவர்களால் பயனில்லை.

---

## மலையகம் பூராகவும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போராட்டங்கள் வெடிக்கும்."

– இவ்வாறு எச்சரித்துள்ளார் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு தற்போதைய பொருளாதார சூழ்நிலைக்கேற்ப நியாயமான சம்பள உயர்வை வழங்குமாறு கம்பனிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் தொழிலாளர் தேசிய சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டம் நேற்று டயகமவில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே திகாம்பரம் எம்.பி. இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

"நாட்டில் நாளாந்தம் பொருட்களின் விலைகள் அதிகரித்து வருகின்றன. மக்கள் வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தோட்டத் தொழிலாளர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, பெருந்தோட்டக் கம்பனிகள் உடனடியாக சம்பள உயர்வை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பள உயர்வை அரசு வழங்கியுள்ளது, எனவே, தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வை வழங்குமாறு கம்பனிகளுக்கு அரசு அழுத்தம் பிரயோகிக்க வேண்டும்.

டயகமவில் ஆரம்பம் மட்டும்தான், சம்பள உயர்வு விரைவில் கிடைக்காவிட்டால் மலையகமெங்கும் போராட்டங்கள் வெடிக்கும். வேலைநிறுத்தப் போராட்டத்திலும் இறங்குவோம். இது தொழிற்சங்கங்களுக்கு எதிரான போராட்டம் அல்ல, கம்பனிகளுக்கு எதிரான போராட்டமாகும்." – என்றார்.

# ஜனாதிபதி நிதியத்தால் வழங்கப்படும் புலமைப்பரிசில் தொகை அதிகரிப்பு



**2021 (2022) ஆம் ஆண்டில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு முதன் முறையாக தோற்றி ஒரே தடவையில் சித்தியடைந்து 2024 ஆம் ஆண்டில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள, பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில் கொடுப்பனவை 2024 பெப்ரவரி மாதம் முதல் ஆயிரம் ரூபாவால் அதிகரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.**

மாணவ, மாணவிகளின் கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்திய நிலையில் ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் வாழும், கற்கும் திறன் கொண்ட, ஆனால் பொருளாதாரச் சிரமங்களுள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களின் எதிர்காலத்தை மேம்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பிரகாரம் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் வழிகாட்டலின் கீழ் ஜனாதிபதி நிதியம் இந்தப் புலமைப்பரிசில் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றது.

2021/2022 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தின் கீழ், ஜனாதிபதி நிதியத்தால் புலமைப்பரிசில் பெறுபவர்களுக்கு மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டதுடன் இதுவரை 10 மாதாந்த தவணைகள் செலுத்தப்பட்டுள்ளன.

இதன்படி, புலமைப்பரிசில் தொகை அதிகரிப்புடன், 2024 பெப்ரவரி முதல் ஜி.சீ.,ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வரை ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் ஜனாதிபதி நிதியிலிருந்து 6 ஆயிரம் ரூபா மாதாந்த உதவித்தொகை வழங்கப்படும்.

மேலும் 2022/2023 ஆண்டு தொடர்பாக ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் உயர் தேர்ச்சி பெற்ற 5 ஆயிரம் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அந்த மாணவர்கள் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வரை மாதாந்தம் 6 ஆயிரம் ரூபா தொகையை வழங்குவதற்காக ஜனாதிபதி நிதியம் தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதன்படி, இலங்கையின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் தற்போது பிராந்திய மட்டத்தில் தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், தெரிவுகள் நிறைவடைந்தவுடன் உரிய மாணவ மாணவிகளுக்கு புலமைப் பரிசில்கள் வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது.

இது தொடர்பான புதுப்பிக்கப்படும் தகவல்களை எதிர்காலத்தில் அறிந்து கொள்வதற்கு , ஜனாதிபதி நிதியத்தின் www.facebook.com/president.fund என்ற உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தை மற்றும் உத்தியோகபூர்வ YouTube சேனலான www.youtube.com/@PresidentsFund I like/follow அல்லது subscribe செய்யுமாறும் www.presidentsfund.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தைப் பார்வையிடுவதன் மூலம் இது தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் ஜனாதிபதி நிதியம் அறிவித்துள்ளது.

## தமிழரசின் பிளவால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். ஆனால், அவர் இன்னமும் பதவியேற்கவில்லை. அதிலும் ஒரு சிக்கல் ஒன்று இப்போது போய்க் கொண்டிருக்கின்றது.

அதாவது பதவியேற்பு வைபவம் அல்லது மாநாடு கால வரையின்றி ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, அதில் என்ன நடக்கும் என்று நாங்கள் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். அதன் பிறகுதான் தமிழரசுக் கட்சி கூட்டைப் பற்றி கதைக்கலாம்.

அதைவிட முக்கியமான விடயமாக இப்போது தமிழரசுக் கட்சி இரண்டாக - மூன்றாக உடைந்திருப்பதைப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. தமிழரசுக் கட்சியாக அதன் தலைவர் எடுக்கின்ற நடவடிக்கைகளை நிச்சயமாக மற்றைய குழு குழப்பிக் கொண்டே இருக்கும்.

ஆகவே, ஒற்றுமை முயற்சியிலே அது பாதகமான ஒரு பாதிப்பை கொடுக்கும் என்றுதான் நினைக்கிறேன். எனவே, முதலில் தமிழரசுக் கட்சியின் அந்த உடைவுகள் சரிக்கட்டப்பட வேண்டும்.

அவ்வாறு ஒன்றாகச் சீராக்கப்பட்டு அது ஒரு கட்சியாகத் திகழ வேண்டும்.

கடந்த காலங்களில் சம்பந்தர் அண்ணர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருந்தாலும் கசப்பான பல அனுபவங்கள் நடந்திருந்தன.

இதன் காரணமாகவே கூட்டமைப்பு பதியப்பட வேண்டுமென அப்போதே நாங்கள் பலரும் கூறி வந்தோம். ஆனாலும், பதியப்படாததனாலேயே சிலர் கூட்டமைப்பை விட்டு வெளியே கூடச் சென்றார்கள்.

இப்போது கூட்டமைப்பாக - ஒற்றுமையாக - ஒரே அமைப்பாக இயங்க வேண்டும் என்றால் அது பதிவு செய்யப்பட்ட கட்சியாக மாற வேண்டும். அதாவது கூட்டிலே வருகின்ற அனைத்துக் கட்சிகளும் பதிவு செய்யப்பட வேண்டும்.

அதற்கு என்று பொதுவான சின்னம் இருக்க வேண்டும். அது வீடாகவும் இருக்கலாம். தமிழரசுக் கட்சி வீட்டு சின்னத்தை விட்டுக் கொடுத்து அதைக் கூட்டமைப்பு சின்னமாகவும் மாற்ற முடியும்.

ஆகவே, இந்தப் பதிவு உள்ளிட்ட விடயங்கள் எல்லாம் நடந்தால்தான் கூட்டமைப்பு அர்த்தபுஷ்டியான கூட்டமைப்பாக அமையும் என்பதே எங்களுடைய அபிப்பிராயம்.

இதனையே நான் மாத்திரமல்ல ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் பங்காளிகளாக இருக்கின்ற அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் மிகத் தெளிவாக ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் இப்படியான ஒரு நிலைப்பாட்டில்தான் நாங்கள் கூட்டமைப்பைப் பற்றி சிந்திக்க முடியும் என்று சொல்லியிருக்கின்றார்கள்." - என்றார்.

## மீண்டும் களமிறங்குவேன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

- இவ்வாறு சூளுரைத்துள்ளார் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா.

கம்பஹா மாவட்டத்தில் களனித் தொகுதியிலேயே அவர் போட்டியிடவுள்ளார் என்றும் அறிவித்தார்.

மக்கள் தன்னை ஓரங்கட்டவில்லை என்றும், களனிப் பகுதிக்கு வந்து தன்னைப் பற்றி மக்களிடம் கேட்குமாறும் அவர் கூறினார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அநுராதபுரம் மாவட்டத்தில் மேர்வின் சில்வா போட்டியிட்டார். தற்போது ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகியுள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ஜனாதிபதி ரணிலின் அழைப்பு

பாரிய பொருளாதாரச் சிக்கலில் மாட்டி, மீள முடியாத இக்கட்டில் தவித்துக் கொண்டிருந்த இலங்கை, சர்வதேச நாணய நிதியம் பிணையெடுத்து உதவ முன்வந்தமையால் மீளவும் மூச்சு விட்டு மீண்டெழக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இலங்கையைத் தூக்கி நிறுத்துவதற்கு பல்வேறு கட்டங்களில் அமைந்த 290 கோடி டொலர் கடன் திட்டத்தை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் இணங்கி உள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடனான கடன் ஏற்பாடுகள் தொடர்பிலும், அதனுடன் தொடர்பு பட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாகவும், ரணில் அரசின் அணுகுமுறைகள், செயற்பாடுகள் குறித்து எதிர்க்கட்சிகள் - குறிப்பாக பிரதான எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தியும் ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும் - கடும் விமர்சனங்களைத் தொடர்ந்து முன்வைத்து வருகின்றன.

இந்தப் பின்புலத்தில்தான் சர்வதேச நாணய நிதியத்துடனான கடனுதவி உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நிதியத்தின் நிர்வாக இயக்குநருடன் ஒன்றாக அமர்ந்து கலந்துரையாடுவதற்கு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைத்துள்ளார்.

“இங்கு அரசியல் கட்சிகள் அனைத்தினதும் பிரதிநிதிகளுடன் ஒரு கூட்டு உரையாடலுக்கு வந்து பங்கேற்குமாறு சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குநருக்கு அழைப்பு விடுக்க நான் தயாராக உள்ளேன். நாம் எப்படி முன்னேறுவது என்பது தொடர்பில் கூட்டாக ஆராய்வோம்” - என்று கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு சுங்கத் திணைக்கள தலைமையகத்தில் நடைபெற்ற சர்வதேச சுங்கத்தின நிகழ்வுகளில் பங்கு பற்றி உரையாற்றுகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் நாம் செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் - உதவி பெறும் திட்டம் - இலகுவில் நாம் விலகிச் செல்ல முடியாத கட்டு என்று குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதன் காரணமாக இந்த ஒப்பந்தத்தின் பொறுப்புக்கள், கடப்பாடுகள் போன்றவற்றை நாடு நிறைவேற்றுவது தொடர்பில்நமக்குள்கூட்டுஉரையாடலும், பரிசீலனையும், தீர்மானங்களும் அவசியம் என்று வலியுறுத்துகின்றார்.

அதாவது, நாடு எதிர்கொண்ட மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளுவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளை நாடுவதைத் தவிர வேறு வழி நாட்டுக்கு இருக்கவில்லை. ஆயினும் அந்த உதவிகளைப் பெறுவதற்காக நாட்டின் சார்பில் அரசு வழங்கியுள்ள உறுதிமொழிகள், கடப்பாடுகள், பொறுப்புக்கள் தொடர்பான விடயத்தில் அச்சுமையை அரசு தலைவர் என்ற முறையில் தாமும் தமது அரசும் மட்டுமே பொறுப்பேற்று சுமக்க முடியாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கருதுகின்றார் போலும்.

அதன் காரணமாக அந்தக் கூட்டுப் பொறுப்பை ஏற்கும் கடப்பாட்டில் தமது பங்காளிகளாக வருமாறு மற்றைய அரசியல் கட்சிகளை - குறிப்பாக பிரதான எதிர்க் கட்சியினரை - அவர் அழைக்கின்றார் என்பதுதான் நிலைமை.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் பலவற்றை நடைமுறைப்படுத்த வேண்டிய மீள முடியாத கடப்பாட்டில் சிக்கிக் கொண்டிருக்கும் அரசுத் தலைமை, அதனால் மக்கள் மத்தியில் தீவிரமடையக் கூடிய எதிர்ப்பு, எரிச்சல், சீற்றம் போன்றவற்றை அரசியல் ரீதியாகத் தாம் தனித்து எதிர்கொண்டு, ஏற்று, சுமப்பதைத் தவிர்ப்பதற்காக, எதிர்க்கட்சிகளையும் இவ்விடயத்தில் பங்காளிகளாக அழைத்து, அவர்களின் தோளின் மீதும் அந்தச் சுமையைச் சுமத்தி, அரசியல் செய்ய முனைகிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பது அவரது உரையிலிருந்து தெளிவாக வெளிப்படுகின்றது.

இலங்கையைப் பொருளாதார நெருக்கடியில்இருந்து பிணை எடுப்பது தொடர்பான சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தின் கீழ், இலங்கை நிறைவேற்ற வேண்டிய பூர்வாங்க கடப்பாடுகளில் பலவற்றை இலங்கை நிறைவு செய்திருப்பதாகச் சுட்டிக்காட்டும் ‘வெரிட்டே ரிசேர்ச்’ ஆய்வு நிறுவனம், ஆனால் அரசாட்சி முறைமை, நிர்வாகம், வெளிப்படைத் தன்மை ஆகியவை தொடர்பாக நாணய நிதியம் சுட்டிக்காட்டி உள்ள சீர்திருத்தங்களை அரசுஇன்னும்கவனத்தில்கூட எடுக்கவில்லை எனத் தெரிவித்துள்ளது.

2023 நவம்பருக்குள் நிறைவேற்று முடிக்கப்பட வேண்டிய சுமார் 73 பூர்வாங்கக் கடப்பாடுகளில் 60 கடப்பாடுகளை சில தாமதங்களுடனாவது அரசு நிறைவேற்றி உள்ளது. ஆனால்இவ்விடயத்தில்இலங்கை அரசின் அர்ப்பணிப்பு, நேர்மைத் தன்மை, வெளிப்படைத்தன்மை, ஒழுங்கான செயற்பாடுகள் ஆகியவற்றை உறுதிப்படுத்தும் கடப்பாடுகள் நிறைவு செய்யப்படவில்லை என்று அந்த அமைப்பு சுட்டிக்காட்டுகின்றது.

இத்தகைய அரசுடன் சர்வதேச நாணய நிதியக் கடப்பாடுகளை சுமப்பதில் கூட்டுச் சேர்வது அல்லது பங்காளிகளாவது எதிர்க் கட்சிகள் தரப்புக்கு ஆபத்தானது தான்.



# காலி பிரதேசத்தின் அபிவிருத்தியை துரிதப்படுத்த விசேட ஆணைக்குழு

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை

காலி பிரதேசத்தின் அபிவிருத்தியை துரிதப்படுத்துவதற்காக விசேட ஆணைக்குழுவொன்றை நியமிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

காலி அபிவிருத்தி தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் கண்காணிப்பு விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது காலி நகரம் மற்றும் காலி கோட்டை பிரதேசங்களுக்கு விஜயம் செய்து அபிவிருத்தி நடவடிக்கைகளை அவர் பார்வையிட்டார்.

காலி கோட்டையில் அமைந்துள்ள அரச நிறுவனங்களையும் காரியாலயங்களையும் காலி கோட்டைக்கு வெளியே கொண்டு வருவதற்கான செயற்பாடுகள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், அவற்றுக்கான அபிவிருத்தி பணிகளை துரிதப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு வலியுறுத்தியுள்ளார்.

காலி நகரத் திட்டத்தை அமுல்படுத்துவதில் நகர அபிவிருத்தி அதிகார சபை, தொல்பொருள் திணைக்களம் மற்றும் ஏனைய அனைத்து நிறுவனங்களும் ஒரே நிறுவனக் கட்டமைப்பின் கீழ் செயற்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

இந்த பகுதியில் சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்கான திட்டங்களை துரிதப்படுத்துவதன் அவசியம் குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.





# நாட்டின் முன்பள்ளி கட்டமைப்பில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லை

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

நாட்டின் முன்பள்ளி கட்டமைப்பில் முறையாகப் பயிற்சி பெற்ற 6 ஆயிரம் ஆசிரியர்கள் மாத்திரமே உள்ளனர் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

19 ஆயிரம் முன்பள்ளிகளில் 34



ஆயிரம் ஆசிரியர்கள் முன்பிள்ளை பருவ அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள போதிலும், அவர்கள் முறையான பயிற்சிகள் எதனையும் பெறவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, தற்போது முன்பிள்ளை பருவ அபிவிருத்திக்காக இயங்கிவரும் அனைத்து முன்பள்ளிகளும் தேசிய கல்விக் கொள்கைக்கு அமைவாக பொதுவான கட்டமைப்பில் நடைமுறைப் படுத்தப்படும் எனவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

# பா.ஜ.க. ஆதரவுடன் 9 ஆவது முறையாக பிஹார் முதல்வரானார் நிதிஷ் குமார்

## 8 பேர் அமைச்சர்களாக பதவியேற்பு

மகாகத்பந்தன் கூட்டணியில் இருந்து வெளியேறி நேற்று காலை முதல்வர் பதவியை இராஜினாமா செய்த நிதிஷ் குமார், மாலையில் பா.ஜ.க. ஆதரவுடன் 9 ஆவது முறையாக பிஹார் முதல்வராக பதவி ஏற்றுக்கொண்டார். அவருக்கு ஆளுநர் ராஜேந்திர அர்லேகர் பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

பிஹார் ஆளுநர் மாளிகையில் இடம்பெற்ற பதவி ஏற்பு விழாவில் பா.ஜ.க. தேசிய தலைவர் ஜெ.பி. நட்டா, ஜிதன் ராம் மஞ்சி, சிராக் பாஸ்வான் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நிதிஷ் குமார் பதவி ஏற்ற போது பா.ஜ.க. தொண்டர்கள் ஜெய் ஸ்ரீராம் என்றும் பாரத் மாதாகி ஜே என்றும் முழக்கமிட்டனர்.

நிதிஷ் குமாருடன் 8 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர். இவர்களில் 3 பேர் பா.ஜ.கவையும், 3 பேர் ஐக்கிய ஜனதா தளத்தையும், ஒருவர் ஹிந்துஸ்தானி ஆவாம் மோர்ச்சா(மதச்சார்பின்மை) கட்சியையும் சேர்ந்தவர்கள். ஒருவர் சுயேட்சை எம்.எல்.ஏ.

பா.ஜ.கவைச் சேர்ந்த சாம்ராட் சவுத்தரி, விஜய குமார் சின்ஹா, பிரேம் குமார், ஐக்கிய ஜனதா தளத்தைச் சேர்ந்த விஜய் குமார் சவுத்ரி, பிஜேந்திர பிரசாத் யாதவ், ஷ்ரவோன் குமார், ஹிந்துஸ்தானி ஆவோம் மோர்ச்சா கட்சியின் தலைவர் சந்தோஷ் குமார் சுமன், சுயேட்சை எம்எல்ஏ சுமித் குமார் சிங் ஆகியோர் அமைச்சர்களாக பதவியேற்றுக்கொண்டனர்.

முன்னதாக, பாட்னாவில் உள்ள ஆளுநர் மாளிகைக்கு நேற்று காலை சென்ற பிஹார் முதல்வர் நிதிஷ் குமார், ஆளுநர் ராஜேந்திர அர்லேகரைச் சந்தித்து இராஜினாமா கடிதத்தைக் கொடுத்தார். பின்னர் ஆளுநர் மாளிகைக்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

“பிஹார் முதல்வர் பதவியை நான் இராஜினாமா செய்து விட்டேன். அமைச்சரவையை கலைக்கவும் ஆளுநரிடம் பரிந்துரைத்துள்ளேன். இண்டியா கூட்டணியில் விஷயங்கள் சரியாக நடக்கவில்லை. நான் காயப்படுத்தப்பட்டேன். எனவே, இண்டியா கூட்டணியை விட்டு நான் வெளியேறிவிட்டேன்” என தெரிவித்திருந்தார்.

இதனிடையே, பா.ஜ.க. சட்டப்பேரவை உறுப்பினர்களின் ஆலோசனைக் கூட்டம் பாட்னாவில் நடைபெற்றது. இதில், கட்சியின் சட்டப்பேரவை குழு தலைவராக மாநில தலைவர் சாம்ராட் சவுத்ரி தேர்வு செய்யப்பட்டார். துணைத் தலைவராக விஜய் குமார் சின்ஹா தேர்வு செய்யப்பட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சாம்ராட் சவுத்ரி,

“என் வாழ்வில் வரலாற்றுத் தருணத்தை பா.ஜ.க. ஏற்படுத்தி இருக்கிறது. கட்சியின் சட்டப்பேரவைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதும், அரசில் பங்கு வகிக்க இருப்பதும்



மிகுந்த உணர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. கடந்த 2020 இல் நடைபெற்ற பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பு என்பது மாநிலத்தின் வளர்ச்சிக்கானது. லாலு யாதவின் பயங்கரவாதத்துக்கு இன்று முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. பிஹாரில் காட்டாட்சி இருக்ககூடாது. அதற்கு முடிவு கட்ட வேண்டும் என முதல்வர் நிதிஷ் குமார் முன்மொழிந்ததை அடுத்து இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது” என கூறினார்.

இந்த நிலையில், நேற்று மதியம் 1 மணி அளவில் மீண்டும் ஆளுநரை நிதிஷ் குமார் சந்தித்தார். அவருடன், சாம்ராட் சவுத்ரி, விஜய் குமார் சின்ஹா உள்ளிட்ட பா.ஜ.க. தலைவர்கள், ஹிந்துஸ்தானி ஆவாம் மோர்ச்சா தலைவர்கள், ஒரு சுயேட்சை எம்.எல்.ஏ. ஆகியோரும் சென்று ஆளுநரைச் சந்தித்தனர்.

அப்போது, பா.ஜ.கவின் எம்.எல்.ஏக்கள் உள்ளிட்ட எம்.எல் ஏக்களின் கையொப்பம் அடங்கிய மனுவை ஆளுநரிடம் அளித்து, தனக்கு பெரும்பான்மை இருப்பதால் ஆட்சி அமைக்க அழைப்பு விடுக்குமாறு உரிமை கோரியிருந்தார்.

கடந்த 2020 ஆம் ஆண்டு பிஹாரில் நடந்த சட்டபேரவை தேர்தலில் பா.ஜ.க., ஐக்கிய ஜனதா தளம் ஆகிய கட்சிகள் அடங்கிய தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்று நிதிஷ் குமார் முதல்வரானார். அதன் பிறகு பா.ஜ.கவுடன் அதிருப்தி ஏற்பட்டதால், 2022 இல் தேசிய ஜனநாயக கூட்டணியிலிருந்து விலகினார்.

ராஷ்ட்ரிய ஜனதா தளம், காங்கிரஸ் ஆகிய கட்சிகள் அடங்கிய மெகா கூட்டணியில் இணைந்து பிஹாரில் புதிய ஆட்சியை அமைத்தார். தற்போது மெகா கூட்டணியில் இருந்து விலகி, பா.ஜ.கவுடன் இணைந்து முதல்வராகி உள்ளார். இரண்டு ஆண்டுகளில் நிதிஷ் குமார் இரண்டாவது முறையாக முதல்வர் பதவி ஏற்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மேற்கு வங்கத்தில் யாத்திரையின்போது கூட்டங்களை நடத்த ராகுலுக்கு தடை!



மேற்கு வங்கத்தில் யாத்திரையின்போது பொதுக்கூட்டங்கள் நடத்த ராகுல் காந்திக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என காங்கிரஸ் மூத்த தலைவர் ஆதிர்ரஞ்சன் சவுத்ரி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“ராகுல் காந்தியின் பாரத் ஜோடோ நியாய யாத்திரை சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. ஆனால் மேற்கு வங்கத்தில் பல இடங்களில் எங்களுக்கு அனுமதியை மறுத்து வருகிறது திரிணமூல் காங்கிரஸ் அரசு. ராகுலின் யாத்திரையின்போது சிலிகுரி பகுதியில் பொதுக்கூட்டம் நடத்த அனுமதி கேட்டோம்.ஆனால் அங்கு எங்களுக்கு அனுமதி தரவில்லை.

இந்த விடயத்தில் மாநில அரசிடமிருந்து சிறந்த ஒத்துழைப்பை நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் அது நடைபெறவில்லை.

மணிப்பூர், அசாம் மாநிலங்களில் எங்களுக்கு சில தடைகள் ஏற்பட்டன. தற்போது அதேபோன்ற பிரச்சினையை மேற்கு வங்கத்திலும் எதிர்கொள்கிறோம். யாத்திரை நிகழ்ச்சியில் தடை களை ஏற்படுத்த முயல்கிறது மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணமூல் காங்கிரஸ் அரசு.” -என்றார்.

# ஹவுதிகளின் ஆளில்லா விமானத்தை செங்கடலில் சுட்டு வீழ்த்தியது பிரித்தானியா

ஹவுத்தி கிளர்ச்சியாளர்களால் செங்கடல் பகுதிக்கு அனுப்பப்பட்ட ஆளில்லா விமானத்தை 'வெற்றிகரமாக' சுட்டு வீழ்த்தியதாக பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

எச்.எம்.எஸ். டயமண்ட் என்ற போர்க்கப்பலை தாக்க முயன்ற ஹவுதி ஆளில்லா விமானத்தையே சுட்டு வீழ்த்தியதாக பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலால் தமது தரப்பில் எவ்வித இழப்பும் ஏற்படவில்லை என பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், இந்த சட்டவிரோதமான தாக்குதலை ஏற்றுக் கொள்ளமுடியாது எனவும் செங்கடலை பாதுகாப்பது தமது கடமை எனவும் பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது.




காசாவில் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகளுக்கு பதிலடியாக நவம்பர் 19 ஆம் திகதி முதல் ஏமனின் ஹவுதி குழு ஆளில்லா விமானங்கள் மற்றும் ஏவுகணைகளை செங்கடலில்செல்லும் கப்பல்களை தாக்க பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு பெல்ஜியத்தில் கார் மீது இலகு விமானம் மோதி விபத்து

## இருவர் உயிரிழப்பு

கிழக்கு பெல்ஜியத்தில் கார் மீது இலகுரக விமானம் மோதியதில் இருவர் உயிரிழந்துள்ளனர் என அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலகுரக விமானம் ஒன்று கிழக்கு பெல்ஜியத்தில் உள்ள ஏரோட்ரோமில் வானில் பறந்துகொண்டிருந்த போது பலத்த காற்று வீசியதால் விமானம் விமானியின் கட்டுப்பாட்டை இழந்துள்ளது.

இந்த நிலையில் விமானத்தை தரையிறக்க விமானி முயற்சி செய்தும் பலனளிக்காமல் வீதியோரம் நின்று கொண்டிருந்த கார் மீது பயங்கரமாக மோதியுள்ளது.

இதில் விமானமும் காரும் தீப் தீப்பிடித்து எரிந்ததில் விமானத்தில் பயணம் செய்த இருவரும் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து தொடர்பாகவும், விமானத்தில் பயணம் செய்தவர்கள் யார் என்பது குறித்தும் அந்த நாட்டு பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.





# ஹமாஸ் அமைப்பின் சுரங்கப்பாதைகளை நெருங்க முடியாமல் திணறும் இஸ்ரேல் படை

ஹமாஸ் அமைப்பால் காசா பகுதியில் நிலத்திற்கு கீழ் அமைக்கப்பட்ட நூற்றுக்கணக்கான கிலோ மீற்றர் நீளமான சுரங்கங்களில் பெருமளவானதை இஸ்ரேலிய இராணுவத்திற்கு அணுக முடியாமல் உள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

காசா மீதான போர் அதன் நான்காவது மாத இறுதியை நெருங்கும் நிலையில், இஸ்ரேலிய இராணுவம் 20 தொடக்கம் 40 சதவீத சுரங்கப்பாதையை சேதப்படுத்தவோ அல்லது செயலிழக்கச் செய்யவே முடிந்துள்ளதாக பெயர் குறிப்பிட விரும்பாத அமெரிக்க அதிகாரிகளை மேற்கோள் காட்டி வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் இணையம் தெரிவித்துள்ளது.

காசாவின் நன்னீர் விநியோகம் மற்றும் நிலத்தடி உள்கட்டமைப்பு மீதான தாக்கம் குறித்த கவலைகளை புறக்கணித்து, சுரங்கப்பாதைகளை தகர்க்க இஸ்ரேல் இதுவரை பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

ஹமாஸ் தலைவர்கள் தங்குமிடம் மற்றும் கைதிகளை வைத்திருக்கும் எஞ்சிய சுரங்கப்பாதைகளை அகற்ற இஸ்ரேலுக்கு இன்னும் பல துருப்புக்கள் தேவைப்படும் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.





# யுக்திய சுற்றிவளைப்பில் மேலும் 803 பேர் கைது

யுக்திய சுற்றிவளைப்பில் மேலும் 803 சந்தேகநபர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

போதைப்பொருளுடன் தொடர்புடைய குற்றங்கள் தொடர்பில் 562 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப்பிரிவில் பட்டியலிடப்பட்டிருந்த 241 சந்தேகநபர்களும் இந்தச் சுற்றி வளைப்பின் போது கைது செய்யப் பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 225 பேரும் அடங்குகின்றனர் எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சுற்றிவளைப்பின் போது 212 கிராம் ஹெரோயின், 101 கிராம் ஐஸ் போதைப் பொருள் என்பன பாதுகாப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்



பட்டவர்களில் ஐவர், தடுத்து வைத்து விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளனர்.

# இலங்கை கிரிக்கெட் மீதான தடை நீக்கம்: சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் அறிவிப்பு!

இலங்கைக்கிரிக்கெட்நிறுவனத்திற்கு சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலினால் விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ள தாக விளையாட்டுத்துறை அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பிலான உத்தியோகபூர்வ ஊடக அறிக்கையை சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் வெளியிட்டுள்ளது. இலங் கைக் கிரிக்கெட் நிர்வாகத்தில் அரசியல் தலையீடு இருப்பதாகத் தெரி வித்து, கடந்த வருடம் நவம்பர் 11 ஆம் திகதி சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலினால் இலங்கை கிரிக்கெட் நிறுவன உறுப்புரிமை இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தது.

# பொருள்கள், பொதிகள் அஞ்சல் சேவைகளுக்கான கட்டணத்தை அதிகரித்தது ரயில்வே திணைக்களம்

பொருள்கள் மற்றும் பொதிகள் அஞ்சல் சேவைகளுக்கான கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது என ரயில்வேத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் இந்த கட்டணம் அதிகரிக்கப் பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அந்தத் திணைக்களம் வெளியிட் டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித் தலில் இந்த விடயம் அறிவிக்கப்பட்




டுள்ளது. பொதியின் எடை மற்றும் கொண்டு செல்லப்படும் தூரம் என்பவற் றின் அடிப்படையிலே இதுவரை கட்ட ணம் அறவிடப்படப்பட்டு வந்தது.

இந்தநிலையில், புதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், பொதிகள் போக்குவரத்துக்காக அறிவிடப்படும் கட்டணத்துக்கு மேலதிகமாக பொதியின் பெறுமதியின் அடிப்படையில் மற்று மொரு கட்டணம் அறவிடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மருந்துகள், வாகன உதிரிப்பாகங்கள், கண்ணாடி மற்றும் மின்சார உபகரணங்களுக்கும் இந்த கட்டணம் அறவிடப்படவுள்ளது.

# மானிய விலையில் உரத்தை வழங்கும் உடன்பாடு இன்று கைச்சாத்தாகிறது

தேயிலை பயிர்ச்செய்கையின் விளைச்சலை அதிகரிக்கும் நோக்கில் மானிய விலையில் உரத்தை வழங்குவ தற்கான உடன்படிக்கை இன்று கைச்சாத் திடப்படவுள்ளது.

அரசாங்கத்தின் இரண்டு உர நிறு வனங்கள், தேயிலை சபை, சிறு தேயி லைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையுடன் இதற்கான உடன்படிக்கை இன்று விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சில் கைச்சாத் திட வுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது.



தேயிலை பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்படும் அனைத்து ரி-750, ரி-709 மற்றும் ரி-200 உரங்களின் விலையை 2,000 ரூபாவினால் குறைப் பதற்கு விவசாய மற்றும் பெருந் தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர அண்மையில் பணிப்புரை விடுத்திருந்தார்.



# இந்திய - இலங்கை படகு சேவை அடுத்த மாதம் முதல் ஆரம்பமாகும்

இந்தியா – இலங்கை இடையிலான பயணிகள் படகு சேவையை எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு இந்திய அரசின் அனுமதி கிடைத்துள்ளதாக துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

யாழ். காங்கேசன்துறையிலிருந்து தமிழகத்தின் நாகப்பட்டிணம் வரை இந்தப் படகுச் சேவை முன்னெடுக்கப் படவுள்ளது. இலங்கை – இந்தியா இடையிலான பயணிகள் கப்பல் சேவை நூற்றாண் டுகள் பழைமை வாய்ந்தது.

நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையினால் பயணிகள் கப்பல் சேவை நான்கு தசாப்தங்களாக தடைப் பட்டிருந்தது.

நான்கு தசாப்தங்களின் பின்னர் இந்தியா – இலங்கை இடையிலான பயணிகள் கப்பல் சேவை கடந்த ஒக் டோபர் 14 ஆம் திகதி ஆரம்பித்து வைக் கப்பட்டது. வட கிழக்கு பருவ மழையின் காரணமாக, இந்த கப்பல் சேவையை ஒக்டோபர் 20 ஆம் திகதியுடன் தற்காலி கமாக நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட் டிருந்தது.

# குளவிக் கொட்டுக்கு இலக்கான ஆறு பேர் மஸ்கெலியா வைத்தியசாலையில் சேர்ப்பு

**(மஸ்கெலியா நிருபர் தி.பெனருமாள்)**

நல்லதண்ணி பொலிஸ் பிரிவில் உள்ள மறே தோட்டத்தில் நேற்று மாலை 4 மணிக்கு குளவிக் கொட்டுக்கு இலக்கான 5 பெண்கள் மற்றும் ஓர் ஆண் என ஆறு பேர் மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் அனு மதிக்கபட்டு சிகிச்சை பெற்று வரு கின்றனர்.

எம்.நவலெட்சுமி (வயது 42), எஸ். தருமலிங்கம் (வயது 40), பி.தெய்வானை (வயது 47), என்.மலர்விழி (வயது 35), பி.கிருஷ்ணவேணி (வயது 30), பி.சிவகுமாரி (வயது 34),

ஆகியோரே தேயிலைஜ் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த வேளையில் தேயிலை செடிகளின் கீழ் கட்டப்பட்ட



இருந்த குளவிக் கூடு கலைந்ததால் இவ்வாறு குளவி கொட்டுக்கு இலக் காகி னர். இவர்கள் தோட்ட வாகனங்கள் மூலம் மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலைக்குக் கொண்டு வர பட்ட நிலை யில் வைத்திய சாலையில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர் என மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

# பெண்களுக்கு எதிரான வன்முறைகளை அறிவிப்பதற்கு விசேட இலக்கம் அறிமுகம்

நாட்டில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்கும் விசேட வேலைத்திட்டம் ஒன்று அமுல் படுத்தப்படும் என பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித் துள்ளார்.இதன்படி, 109 எனும் புதிய விசேட இலக்கமொன்று அறிமுகப்படுத் தப்பட்டுள்ளது.

மேற்படி இலக்கத்திற்கு அளிக்கப் படும் முறைப்பாடுகளுக்கு 48 மணித் தியாலங்களில் தீர்வுகாண உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வெயாங்கொடை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட சமூக பொலிஸ் குழு உறுப்பினர் களுடன் கலந்து கொண்டு உரையாற் றும் போதே அமைச்சர் டிரான் அலஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.





### யாழ் பல்கலையில் இம்முறை

# 108 பானைகளில் பொங்கி தமிழர் தேசியப் பொங்கல்!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் 108 பானையில் 11 பீடங்களையும் ஒருங்கிணைத்து நடாத்தப்பட்ட தமிழர் தேசியப் பொங்கல் விழா கடந்த வெள்ளிக்கிழமை பல்கலைக்கழக முதன்மை வளாகத்தில் இடம்பெற்றது.

பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களினதும் பீடாதிபதிகள் முதன்மை அதிதிகளாக கலந்து கொண்ட பொங்கல் நிகழ்வில் மாணவர்களால் 108 பானையில் பொங்கல் பொங்கப்பட்டதோடு, கயிறிழுத்தல், தலையணைச் சண்டை, முட்டி உடைத்தல் போன்ற தமிழர் பாரம்பரிய விளையாட்டுக்களோடு, மாலை கைலாசபதி கலையரங்கில் கலை, பண்பாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

பல்கலைக்கழகமே விழாக்கோலம் பூண்டிருந்த பொங்கலுக்கான முதன்மைப் பங்காளர்களாக நர்மதா நகை மாடத்தினர் உடன்நின்றதோடு, அனைத்துப் பீட மாணவர்களினதும் ஒருங்கிணைவென்பது பல ஆண்டுகளின் பின்னர் சாத்தியமனதும் நோக்கத்தக்கது. மேலும் மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடனும் விருப்பத்துடனும் பொங்கல் நிகழ்வில் பங்கேற்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.













# மட்டக்களப்பின் கலை இலக்கிய அமைப்புக்கள் நேற்று ஒன்றிணைந்து நினைவு கூர்ந்த இலக்கிய ஆளுமைகள்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு தமிழ்ச்சங்கம், மகுடம் கலை இலக்கிய வட்டம், கதிரவன் கலைக் கழகம், ‘கா’ இலக்கிய அமைப்பு, அனாமிகா பண்பாட்டு மையம் மற்றும் தென்றல் இலக்கிய இதழ் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த அமரர் பேராசிரியர் செ.யோகராசா மற்றும் அமரர் வெ. தவராசா (கவிஞர் ராஜாத்தி) ஆகியோரை நினைவு கூரும் நினைவிடை தோய்தல் நிகழ்வு நேற்றைய ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் வி.றஞ்சிதமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மகுடம் வி.மைக்கல் கொலின் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்நினைவிடை தோய்தலில் தமிழ் மொழி வாழ்த்தை சாமிளா சரீப் இனிமையாகப் பாடி தமிழ்மொழியின் சிறப்பைப் பெருமைப்படுத்தினார்.

அமரர்களான பேராசிரியர் செ.யோகராசா மற்றும் வெ.தவராசா ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டு, அகவணக்கமும் இடம் பெற்றது.

நினைவுப் பேருரைகளை அமரர் பேராசிரியர் செ.யோகராசா தொடர்பாக கவிஞர் ஏ.பீர்முகமதுவும், கவிஞர் வெ.தவராசா தொடர்பாக மட்டக்களப்பு தமிழ்ச் சங்கப் பொதுச் செயலாளர் மு.கணேசராஜாவும் நிகழ்த்தினர்.

தொடர்ந்து நிகழ்வில் பங்கேற்ற ‘தென்றல்’ சஞ்சிகை ஆசிரியர் க.கிருபாகரன், ‘நீங்களும் எழுதலாம்’ சஞ்சிகை ஆசிரியர் எஸ்.ஆர்..தனபாலசிங்கம் மற்றும் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலர் இலக்கிய ஆளுமை தொடர்பாக தமது அஞ்சலிகளைப் பதிவு செய்தனர்.

இந்நிகழ்வில் கவிதாஞ்சலியைக் கதிரவன் தங்கராசா இன்பராசாவும், நன்றியுரையை எழுத்தாளர் ச.மணிசேகரனும் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், முன்னாள் கிழக்கு மாகாண முன்பள்ளி பணிப்பாளர் பொன் செல்வநாயகம், கிரான் பிரதேச செயலாளர் கா.சித்திரவேல் உட்படப் பல இலக்கிய, கல்வித் துறைசார்ந்தோர் கலந்து கொண்டனர்.
















# ஆரம்பத்திலேயே சிகிச்சை எடுத்தால் தொழுநோயைக் குணப்படுத்த முடியும்

## சர்வதேச தொழு நோய் தினமான இன்று டாக்டர் சனூஸ் காரியப்பர் ஆலோசனை

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

பொது மக்கள் மத்தியில் தொழு நோய் குறித்த விழிப்புணர்வு அதிகரிக்கச் செய்யவும், இந் நோயினால் பாதிப்புக் குள்ளாகி அவதிப்படுவோரிடையே மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி ஆறுதல் படுத்தும் வகையிலும் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் இறுதி ஞாயிற்றுக்கிழமையும் சர்வதேச ரீதியில் தொழு நோய் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

உலகில் ஆண்டு தோறும் இரண்டு லட்சத்திற்கும் அதிகமானவர்கள் இந்த நோயினால் பாதிக்கப்பட்ட நிலையில், இலங்கையில் வருடமொன்றுக்கு 2000 பேர் பாதிப்பிற்குள்ளாகி வருகின்றனர் என்று தொற்று நோய் ஒழிப்புத் திட்டத்தின் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் டாக்டர் பிரசாத் ரணவீர தெரிவித்துள்ளார்.

தொழு நோயால் பாதிக்கப்பட்டோர், சமூகத்தில் மரியாதையுடன் வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். தொழு நோய் ‘மைக்கிரோ பக்ரீரியம் லெப்ரோ’ எனும் பக்ரீரியாவினால் ஏற்படுத்தப்படும் ஒரு தொற்று நோயாகும்.

சிகிச்சை எடுத்துக் கொள்ளாதவரை கண்கள் மற்றும் கைகள் பாதிப்புள்ளாகக் கூடும். மூக்கு மற்றும் வாய் மூலம் இந்த நோய் பரவக்கூடியது.

எனவே, நோய் அறியப்பட்ட உடன் உடனடி தீவிர சிகிச்சைக்கு உட்பட வேண்டும்.

சிறப்பு உடைகளை அணிவதுடன் பொது மக்கள் அதிகம் சஞ்சரிக்கும் இடங்களுக்கு செல்வதைக் கூடிய வரையில் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

வரலாற்றில் மிகப் பழங்காலந்தொட்டு இந் நோய் அறியப்பட்டிருந்தாலும் இன்றைய நோய் பல தன்மைகளில் வேறுபட்டுக் காணப்படுகின்றது. – என்று சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை சிரேஷ்ட வைத்திய நிபுணர் டாக்டர் சனூஸ் காரியப்பர் தெரிவித்தார்.

# யுக்திய வேலைத்திட்டம் நிறுத்தப்பட மாட்டாது

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

இந்த ஆண்டின் ஜு/ன் மாத இறுதிக்குள் திட்டமிடப்பட்ட குற்றச் செயல்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தல்களை முற்றாக ஒழிப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

யுக்திய எனப்படும் விசேட போதைப்பொருள் சோதனை நடவடிக்கையை நிறுத்துமாறு எந்தவொரு வெளித் தரப்பினர்களால் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும், நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும் யுக்திய வேலைத்திட்டம் நிறுத்தப்பட மாட்டாது எனவும் அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.






# பெரும்போக நெல் அறுவடையில் விவசாயிகளுக்கு பாரிய நஷ்டம்!

**(ஏ.எச். ஹஸ்பர்)**

பெரும்போக நெற் செய்கை தற்போது இயந்திரம் மூலமாக அறுவடை இடம் பெற்று வரும் நிலையில் விளைச்சலில் பாரிய நஷ்டங்களை எதிர் நோக்கி யுள்ளோம் என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை மாவட்டம் முள்ளிப் பொத்தானை கமநல சேவை பிரிவுக் குட்பட்ட சிராஜ் நகர் பகுதியில் தற்போது நெல் அறுவடை இடம் பெற்றாலும், போதிய விளைச்சல் கிடைக்காமை, உரிய முறையில் பசளை, கிருமி நாசினி கிடைக்காமை, ஒரு வகை நோய் தாக்கம் போன்றனவற்றாலும் சீரற்ற கால நிலையாலும் வேளாண்மை செய்கை அழிவை சந்தித்துள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த பகுதியில் சுமார் 200 இற்கும் அதிகமான ஏக்கர் நிலங்களில் நெற் செய்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. இருந்த போதிலும் ஒரு ஏக்கருக்கு ஐந்து தொடக்கம் ஏழு மூடைகளே விளைச்சல் கிடைத்துள்ளது.

வெட்டுக் கூலி அதிகம், நெல்லுக்கான உத்தரவாத விலை இன்மை போன்ற காரணமாக கடனாளியாக மாறியுள் ளோம் என விவசாயிகள் தெரிவிக் கின்றனர்.

அரசாங்கம் நிவாரணங்களைப் பெற்றுத் தர வேண்டும் எனவும், உரிய திணைக்களங்கள் இதனைஒ பார்வை யிட்டு அழிவு தொடர்பில் மதிப்பீடு செய்து, அதற்கான குழுவை நியமித்து, விவ சாயிகளைப் பாதுகாக்க முன்வர வேண் டும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.






# இன்றைய ராசி பலன்கள் - 29.01.2024




இன்று பதற்றமான சூழ்நிலை உருவாகும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதல் தரும். ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களில் ஈடுபடுவதன் மூலம் உங்களை நீங்கள் நல்ல முறையில் வளர்த்துக் கொள்வீர்கள்.

பேச்சு வார்த்தைகளின் மூலம் வரும் மோதல்களைத் தவிர்க்க உங்கள் மேலதிகாரிகளுடன் கவனமாக பழகுங்கள். பொறுமையுடன் இருக்க வேண்டும். விமர்சனங்களை விளையாட்டாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் நட்பாக பழக மாட்டீர்கள். இருவருக்கும் இடையே புரிந்துணர்வு இல்லாததே இதற்கு காரணம். நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு இன்றைய நாள் உகந்ததல்ல. புதிய முதலீட்டு முயற்சிகள் நன்மை அளிக்காது.




இன்று உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய கடுமையாகப் போராட வேண்டும். உணர்வுகள கட்டுப்படுத்தி அமைதியாக இருக்க வேண்டும். எது வந்தாலும் ஏற்றுக் கொள்ளுங்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தள்ளிப்போடவேண்டும்.

அதிக பணிகள் காணப்படும். குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையிடம் நல்லுறவை பகிர்ந்துகொள்ள மாட்டீர்கள்.

உங்கள் குடும்ப நலத்திற்காக பணத்தை செலவு செய்வீர்கள். அதிகரிக்கும் பொறுப்புகளை எதிர்கொள்ள நேரும். உங்கள் தந்தையின் உடல் நலம் திருப்திகரமாக இருக்காது. இதனால் உங்களுக்கு கவலை ஏற்படும்.




இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்கும். இலக்கில் வெற்றி அடைய வேண்டும் என்ற உங்கள் உறுதி உங்களை முன்னேற்றும். விரைந்து முடிவெடுக்கும் மனநிலை உங்களிடம் காணப்படும்.

உங்கள் பணிகளை மகிழ்ச்சியோடு செய்வீர்கள். சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படும். உங்கள் அலுவலகத்தில் விருந்து அல்லது விழா கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள்.

உங்கள் வீட்டில் நடக்கவிருக்கும் விழா ஒன்றைப் பற்றி உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவருக்குமிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். உங்கள் சேமிப்பு உயர வாய்ப்பு உள்ளது. உங்கள் பிரியமானவரின் விழாவில் கலந்து கொள்ள பணம் செலவு செய்வீர்கள்.




உங்கள் அன்றாட செயல்களை கையாளும் போது கவனமாக இருக்க வேண்டும். முக்கிய முடிவுகள் இன்று எடுப்பதை தவிர்க்க வேண்டும். மனதில் சஞ்சலமான எண்ணங்கள் காணப்படும். மன அமைதி பெற தியானத்தில் ஈடுபடுங்கள்.

அதிக பணிகள் காணப்படுவதால் இன்று பணிகளை உங்களால் குறித்த நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். உறவின் நல்லிணக்கத்தை இது பாதிக்கும் என்பதால் இதனை தவிர்க்க வேண்டும்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் அளவிற்கு உங்களிடம் பணம் காணப்படாது. தேவையற்ற செலவுகள் ஏற்படும். இதனால் கவலை உண்டாகும்.




இன்று கவலையுடன் காணப்படுவீர்கள். இன்று எளிதில் உணர்ச்சிவசப்பட நேரலாம். அமைதியாக இருக்க முயலுங்கள். உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்துங்கள்.

பணியிடத்தில் காணப்படும் சவால்கள் காரணமாக ஓய்விற்கு நேரம் இருக்காது. பணிகளை திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை தக்க வைக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

குடும்பத் தேவைக்ககாக பணத்தை செலவு செய்வீர்கள். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் கானப்படும்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரலாம் இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




இன்று யதார்த்தமான அணுகு முறையைக் கையாள வேண்டும். உங்கள் வளர்ச்சியில் தடைகளை சந்திக்க ஏற்கலாம். இன்று சுமாரான பலன்களே கிடைக்கும்.

பணியிடத்தில் இன்று நீங்கள் வெற்றி பெறுவதற்கு கடுமையான முயற்சிகள் தேவை. திறமையாகப் பணியாற்ற நீங்கள் திட்டமிட வேண்டும்.

கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். இது இருவருக்கும் இடையிலான நல்லுறவை பாதிக்கும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. உங்கள் குடும்பத்திற்காக தேவையற்ற வகையிலான பணம் செலவு செய்ய நேரலாம். உணவு முறையில் கவனம் செலுத்த வேண்டும். உணவு ஒவ்வாமை காரணமாக உடல் நலம் பாதிக்கப்படலாம்.




உங்கள் இலக்குகளை நிறைவேற்றுவீர்கள். இந்து மகிழ்ச்சியான நாள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும். நீங்கள் வளர்ச்சிப் பாதையில் முன்னேறுவீர்கள்.

உங்கள் பணியில் மிகுந்த திருப்தி கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். இருவரும் அன்பான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதால் அன்பு மேலும் அதிகரிக்கும்.

இன்று நிதிநிலை திருப்திகரமாக இருக்கும். இன்று அதிர்ஷ்டமான நாள். வருமானமும் சேமிப்பும் உயரும்.

உங்களிடம் காணப்படும் நம்பிக்கையான மனநிலை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பலன்கள் உங்களுக்கு சாதகமாக கிடைக்கும். உங்கள் திறமைகள் வெளிப்படும் நாள். வெற்றி பெறுவதற்கான உறுதி உங்களிடம் காணப்படும்.

உங்கள் சக பணியாளர்களின் நல்லாதரவு கிடைக்கப் பெறுவீர்கள். பணியிடச் சூழ்நிலை சாதகமாக இருக்கும். எனவே குறித்த நேரத்திற்கு முன்பே கொடுத்த பணிகளை முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் சகஜமான அணுகுமுறையைக் கையாள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையிலான உறவுப் பிணைப்பு வலுப்படும்.

நிதிநிலைமையில் போதுமான பொருளாதார பாதுகாப்பு காணப்படும். இன்று கணிசமான தொகையை சம்பாதிப்பீர்கள். அது உங்களுக்கு திருப்தியைத் தரும்.

உங்களிடம் காணப்படும் மன உறுதி காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 29.01.2024




இன்று சிறிது மன உளைச்சல் காணப்படும். பிறருடன் பேசும் பொழுது கவனமாகப் பேச வேண்டும். இசை மற்றும் பொழுதுபோக்கு நிகழ்சிகள் உங்கள் மனதிற்கு சற்று ஆறுதலைத் தரும். உங்கள் சக பணியாளர்களால் பணியில் சில இடையூறுகள் ஏற்படும். பணியிடத்தில் சுமுகமான சூழ்நிலை இருக்காது. அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும் போது அமைதியாகவும் நயமாகவும் பேச வேண்டும். குடும்ப பிரச்சினை சம்பந்தமான சில பேச்சு வார்த்தைகள் காரணமாக உறவில் சிக்கல் ஏற்பட்டு நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

பணப்புழக்கம் இன்று திருப்திகரமாக இருக்காது. செலவுகள் அதிகமாக காணப்படுவதன் காரணமாக இன்று சேமிக்க இயலாது.




இன்று இனிமையான நாளாக இருக்கும். இன்று புதிய முயற்சிகளில் இறங்கலாம். இன்று நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள்.

இன்று நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சிகரமான தருணங்களை கழிப்பீர்கள். இதனால் அவர் மிகவும் மகிழ்ச்சியடைவார்.பணப்புழக்கம் போதிய அளவைவிட அதிகமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு கணிசமாக உயரும். இன்று நீங்கள் மிகவும் ஆற்றலுடன் காணப்படு வீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.




இன்று சில ஏமாற்றங்கள் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் செயல்களில் தாமதங்கள் காணப்படும். இன்றைய சவால்களை சந்திக்க திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

பணியிடத்தில் காணப்படும் கடினமான சூழ்நிலை காரணமாக பணியில் உங்கள் ஆர்வம் குறையும். இதனால் உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையிடம் இன்று உணர்ச்சிவசப்படாமல் இருக்க வேண்டியது அவசியம். இது உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்க உதவும்.

இன்று தேவையற்ற செலவுகள் காரணமாக உங்கள் பணம் கரையும். பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.




இன்று நற்பலன்கள் உறுதியாக கிடைக்கும் நாள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெற வாய்ப்புள்ளது. உங்களிடம் தன்னம்பிக்கை நிறைந்து காணப்படும். உங்கள் ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் நற்பலன்கள் கிடைக்கும்.

உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள். உங்கள் செயல்திறன் மூலம் நல்ல பெயரைப் பெறுவீர்கள். கடின உழைப்பின் மூலம் வெற்றிக்கு வழி கிடைக்கும்.

உங்கள் அன்பான நேர்மையான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை பாதுகாப்பானதாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு கணிசமாக உயரும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள். மிகவும் உற்சாகமாக காணப்படுவீர்கள்.





